(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 42.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, நவெம்பர் 17, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0015 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மிஹின் எயார் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை குத்தகைக்குப் பெறப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட விமானங்களின் எண்ணிக்கையையும்,

(ii) செலுத்தப்படும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) நட்டம் ஏற்படாமல் செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான அதிகுறைந்த சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(iv) விமான சேவையின் ஆரம்பத்திலிருந்து செலவை ஈடுசெய்வதற்கு கொண்டு செல்லப்பட்ட சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும் மாதாந்த அடிப்படையிலும்,

(v) சரக்கு ஏற்றிச் செல்வதற்கான மொத்த இயலளவு, இற்றைவரை கொண்டு செல்லப்பட்ட மொத்த சரக்கின் கொள்ளளவு, மற்றும் ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள், விமான சேவைகள், அலுவலக இடவசதி மற்றும் களஞ்சிய இடவசதி, வரிகள், விமான நிலுவைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாடுகள் ஆகியவற்றின் மொத்த நிலுவையை இன்றுள்ளவாறாக கால அளவுடனும்,

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பணியாளர்களையும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் உரிமைகள் அடங்கலாக மாதமொன்றுக்குச் செலுத்தப்படும் மொத்தக் கொடுப்பனவுகளையும் மாதாந்தம் 200,000 ரூபாவிற்கு சம்பளத்தைப் பெறும் எல்லா பணியாளர்களின் விபரங்களையும்,

(iii) உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் கூட விமானப் பணியாளர்கள் குழு பராமரிப்புக் காப்புறுதிக்காக (ACMI) அவர்கள் செலுத்தும் மேலதிகச் செலவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0084 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசாங்கம் கடன் பெற்றுக்கொண்ட மூலங்களும் வட்டி வீதங்களும் யாவையென்பதையும்,

(ii) பெற்றுக்கொண்ட கடன்களுக்காக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசாங்கத்தினால் மீளச்செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை யாதென்பதையும்,

(ii) மீளச்செலுத்தப்பட்ட கடன் வட்டித் தொகை யாதென்பதையும்,

(iii) மீளச் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டித் தொகைகள் எந்த மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காகவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0177 / '09

3.

கௌரவ விஜித ரணவீர,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாதோட்டை மாவட்டத்தில் குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து நடத்தப்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட தச்சுத்தொழில் கொட்டகைகளின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களின் பெயர், முகவரி, கிராம அலுவலர் பிரிவு, பிரதேசச் செயலாளர் பிரிவு, உரிய பிரதேச சபை, பதிவு இலக்கம், தொழிலின் இயல்வபு ஆரம்பித்த ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை,

(iii) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து தொழிலில் ஈடுபடும் அனைத்து தச்சுத் தொழிலாளர்களும் சுற்றாடல் உரிமப் பத்திரத்தை வருடாந்தம் பெறவேண்டுமா,

(iv) சுற்றாடல் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை மற்றும் செலவிட வேண்டிய முழுத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களுக்கான சுற்றாடல் வரி அறவீடு எப்போது முதல் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இவ்வரியை செலுத்தியோர் எண்ணிக்கை யாது,

(iii) தச்சுத் தொழிலாளர்களுக்கு பெரும் செலவுச் சுமையாக உள்ள இவ்வரியை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0228 /'09

4\.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மருந்து வகைகள் கொள்வனவு செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்படாமல் 2005 ஆம் ஆண்டில் 670 Streptokinase Injection அலகுகள், ஒரு அலகு 5000 ரூபாய் வீதம் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டில் Streptokinase Injection ஒன்றின் சராசரி விலை எவ்வளவென்பதையும்,

(ii) ஏற்பட்ட நட்டத்தின் நிதிப் பெறுமதி யாதென்பதையும்,

(iii) 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிதி முறைகேடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0572 / '09

5\.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் எத்தனை பாடசாலைகள் கல்வி நடவடிக்கை களுக்காகத் திறக்கப்பட்டிருக்கின்றன,

(ii) திறந்திருக்கின்ற பாடசாலைகளில் அதிபர் தரத்திலான எத்தனை அதிபர்கள் இருக்கின்னறனர்,

(iii) எத்தனை பாடசாலைகளில் பதிற் கடமையாற்றும் அதிபர்கள் சேவை யாற்றுகின்றனர்,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இம் மாகாணத்தில் பாடசாலைகளில் அதிபர்களாக சேவையாற்றுவதற்காக அதிபர் தரத்திலான எத்தனை அதிபர்கள் தேவைப்படுகின்றனர்,

(ii) பாடசாலை அதிபர் தரத்தில் I, II, III ஆம் தரங்களுக்குரிய பாடசாலை அதிபர்கள் வெவ்வேறாக எத்தனைபேர் சேவையிலீடுபட்டிருக்கின்றனர்,

(iii) நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) பாடசாலை அதிபர்களாகப் பணியாற்றாத அதிபர் தரத்திலான பாடசாலை அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) இவ்வதிபர் தரத்திலானவர்களை பாடசாலை அதிபர்களாக நியமிக்க உரிய நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0625 /‘09

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு ,— (2)

(அ) (i) இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எப்போதிருந்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் ,

(ii) அவரது தகைமைகள் யாவையென்பதையும் ,

(iii) அவர் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(iv) அவ்விஜயங்களுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை எவ்வள வென்பதையும் ,

(v) குறித்த விஜயங்களின்போது இந்நாட்டுக்கு பெற்றுத் தந்துள்ள நன்மைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0726 / ’09

7.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகலை மாவட்ட நீர்ப்பாசனத் திட்டங்களில் ஹக்வட்டுனாஓய திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் நெற்பயிர்ச்செய்கை செய்யப்படும் நிலப்பரப்பளவும் கடந்த பத்து வருடங்களில் முழு நிலப்பரவிலும் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட போகங்களின் எண்ணிக்கையும் யாதென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நீர்த்தேக்கத்துக்கு மேலுள்ள தேக்கு, யுப்கெலிப்டஸ், எகேஷஜயா, முதலிய வெளிநாட்டு வனப் பயிர்ச்செய்கையை அகற்றிவிட்டு உள்நாட்டு வனப் பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு சுற்றாடல் இயற்கை வள அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா,

(ii) நீர்ப்பாசன நீர்முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் துரிதப்படுத்தப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்ட நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு மற்றும் நீர்த்தேக்க மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இந்நீர்த்தேக்கத்தின் நிலப்பரப்பு எவ்வளவு,

(ii) கொள்ளளவு எவ்வளவு,

(iii) பிரதான நீர் மூலம் யாது,

(iv) இந் நீர் மூலத்தின் நீர் வழங்கல் கொள்ளளவுக்கு போதியதாக உள்ளதா,

(v) நீர்த் தேக்கத்தின் நீர்ப்பற்றாக்குறைக்குத் தீர்வாக மகாவலி நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது எப்போது,

(vi) இன்றேல், மாற்றுத் திட்டமொன்றை சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0773 / '09

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில் பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவில் ஹுலங்கந்த—கரந்தகெட்டிய வன ஒதுக்குப்பிரதேசம் துப்புரவு செய்யப்பட்ட ஜி. பியதாச, ஜி. காமினி திலக்கசிறி ஆகியோர்களால் வீடு அமைப்பதற்காக நிலம் தயார் செய்யப்பட்டு அத்திவாரம் இடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு இந்த வன ஒதுக்குப் பிரதேசத்தில் வீடுகளை அமைக்க யார் அனுமதி வழங்கினார் என்பதையும் அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(ii) இவர்கள் இந்த வன ஒதுக்குப் பிரதேசத்தை சட்டத்துக்கு முரணான வகையில் துப்புரவு செய்திருப்பின் அது தொடர்பாக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை என்ன என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0229 /'09

9.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்படும்போது பின்பற்றப்படவேண்டிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்படாமல் 2003 ஆம் ஆண்டில் Spinal Needles 1650 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அலகொன்று கொள்வனவு செய்யப்பட்ட விலை எவ்வள வென்பதையும்,

(ii) 2003 ஆம் ஆண்டில் Spinal Needles அலகொன்றின் சராசரி விலை யாதென்பதையும்,

(iii) Spinal Needles கொள்வனவு செய்யப்பட்டபோது ஏற்பட்ட நிதி ரீதியிலான நட்டம் எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி நிதி முறைகேட்டிற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவரென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0644 / '09

10.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடக்கில் மனிதாபிமான நடவடிக்கையின் பின்னர் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற சுமார் மூன்று இலட்சம் மக்களுக்கு போதியளவு வசதிகள் இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியாவுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி ஒவ்வொரு நிலையத்திலும் வாழ்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கையும் ஆட்களின் எண்ணிக்கையும் எவ்வளவு,

(iii) வவுனியாவுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அந்த நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற சுமார் மூன்று இலட்சம் மக்களுக்கான உணவு பானங்களுக்கு அரசாங்கம் நாளாந்தம் எவ்வளவு பணத்தை செலவிடுகின்றது,

(iv) உணவு பானங்களுக்கு மேலதிகமாக ஏனைய நாளாந்த செலவுகள் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இந்நிலையங்களில் நிர்வாகப் பணிகளுக்காக புதிய பணியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா,

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவ்வனைத்து செலவுகளும் சம்பந்தப்பட்ட அமைச்சின் மூலம் ஏற்கப்படுகின்றதா,

(iv) இன்றேல், இதன்பொருட்டு செலவுகளைப் பொறுப்பேற்கின்ற ஏனைய நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0653 / '09

11.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வள வென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வள வென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவை யென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0690 / '09

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றைய திகதி வரையிலான கடந்த ஐந்து வருடங்களுக்கான இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் இலாபம்/ நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும் ,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக, நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களுக்கான -

(i) பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட திகதிகளையும்,

(ii) வருமானம் மற்றும் செலவினையும்

வருடாந்த அடிப்படையில் அவர் கூறுவாரா?

(இ) இபோச யின் மொத்தக் கடனினை 2002 முதல் 2008 வரை உள்ளவாறாகவும், 2009ல் இன்றைய திகதி வரை உள்ளவாறாகவும், அவர் குறிப்பிடுவாரா?

(ஈ.) இன்றேல், ஏன்?

0765 / '09

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களில் தொல்பொருளியல் பெறுமதியுடைய எத்தனை இடங்கள் உடைத்துச் சிதைக்கப் பட்டிருக்கின்றன,

(ii) அவ்விடங்கள் யாவை,

(iii) அவற்றில் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை எவ்வளவு,

(iv) அதன் பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை எவ்வளவு,

(v) சம்பந்தப்பட்ட சம்பவங்களில் தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0774 / '09

14.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு ,பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ள, குறுணாகலை வீதி, குரு பவுர, இல. 163 எனும் முகவரியில் திரு. கே. ஏ. ரத்னாயக்க குடியிருந்த வீடு, 2007.12.11 ஆம் திகதி ஹேமந்த ரோஹண என்பவர் உள்ளிட்ட குண்டர்கள் குழுவொன்றினால் பாரிய டோசரினால் உடைத்து அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) மனைவி உட்பட பிள்ளைகளை வீட்டிலிருந்து வெளியேற்றி பொருட்கள் உடைக்கப்பட்டு வேறொரு காணியில் எறியப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இது பற்றி அன்றைய தினமே தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மதுபோதையில் செயலாற்றிய மேற்படி குண்டர்கள் கும்பல் தொடர்பாக இதுவரை சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தற்போது நிர்க்கதியாகியுள்ள இக் குடும்பத்திற்காக நீதியை நிலைநாட்டி இவர்கள் குடியிருந்த வீட்டையும் பொருட்களையும் மீளப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0661 / '09

15.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இறுதியாக பெற்றுக்கொண்ட கடன் தொகை எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கடனை பெறுவதற்கு விண்ணப்பித்தது எப்போதென்பதையும் ,

(iii) வேண்டப்பட்ட கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி வீதம் எவ்வள வென்பதையும் ,

(iv) மேற்படி கடனைப் பெற்றுத்தருவதற்கான நிபந்தனைகள் யாவை யென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) தற்போது எமது நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை எவ்வள வென்பதையும் ,

(ii) பெற்றுக்கொண்ட கடனை எத்தகைய பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்ககப்படுகின்றதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 2009 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாதுள்ளதால், குறிப்பிட்ட தெரிகுழுவுக்கு வழங்கப்பட்ட கால எல்லையை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2010 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு.

*2.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 145, நிகழ்ச்சித்திட்டம் 02,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் எழுபத்தைந்து கோடி (ரூபா 75,00,00,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 145 | — மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 75,00,00,000 |
| | மொத்தம் | ரூ. | 75,00,00,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, நவெம்பர் மாதம் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 24 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 87,606,003,938.

*4.

ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரினால் செஸ் வரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2009 யூலை 31 ஆம் திகதிய 1612/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— தாவரப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,—1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்பு சட்டத்தின் 12(2) ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 1623/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான (திருத்தச்) சட்டமூலம்— இரண்டாம் மதிப்பீடு.

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சிகரெட், சுருட்டு, பீடி, அல்லது குழாய்கள் புகையிலை பொருட்டான மூலப்பொருள் அல்லது முடிவுற்ற பொருட்களை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆந் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*30.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*31.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*32.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

*33.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*34.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*35.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*36.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*37.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

38.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

தொழில் உத்தியோகத்தர்களின் சங்க நலன்புரி நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

பிரேமதாச மத்திய நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

ஸ்ரீ சுமங்கல சரண சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

46.

ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

47.

இலங்கை சிறுகைத்தொழிற் சபை (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

48.

அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

49.

மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

50.

இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

51.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

52.

கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0022 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0121 / '09

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக சுயாதீன தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப்பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வளவென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0122 /'09

3.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வடமேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக சுயாதீன தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வளவென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0654 /'09

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு மின்வலு, சக்தி அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வள வென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வள வென்பதையும்,

அவர் இச்சவைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவை யென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0655 /'09

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சுகாதார நலத்துறை, போசணை அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வள வென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வள வென்பதையும்,

அவர் இச்சவைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0657 /'09

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்,

அவர் இச்சவைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0659 /'09

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு மின்வலு, சக்தி அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்,

அவர் இச்சவைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?